1537

Tamilnadu Legislative Assembly Debates

Official report

V36. No. 1: 19th January 1991

©

144894

வெளியீடு 3–6–1991 Issued 3–6–1991

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMILNADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, சனவரி 19, 1991–தொகுதி 36–எண் 1
Saturday, the 19th January 1991-Volume 36-No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–600 009.
**Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009.**

விலை ரு. 3.00] [Price Rs. 3.00

உள்ளடக்கம்

19—1—1991


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii—v |
| Personnel of the Government of Tamil Nadu | vii—ix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | xi—xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) .. | xv—xxvi |
| 1. இரங்கல் குறிப்புகள்— | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு .. .. | 1—2 |
| 2. இரங்கல் தீர்மானம்— | |
| உறுப்பினர் திரு. எம்.எஸ்.கே. ராஜேந்திரன் மறைவு .. .. .. .. | 2—16 |
| *மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் .. | 2—4 |
| திரு. குமரி அனந்தன் .. .. .. | 4—5 |
| திரு. கே. ரமணி .. .. .. .. | 6 |
| திரு. பி. எச். பாண்டியன்.. .. .. | 6—7 |
| திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் .. | 7—8 |
| திரு. எம். அப்துல் லத்தீப் .. .. | 8—10 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு.. .. .. | 10—11 |
| திரு. ஜி. பழனிச்சாமி .. .. .. | 11—12 |
| மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி.. .. | 12—14 |
| 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 17—30 |


53.325—A

144894

D
V211,31 N71
N71.36.1

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் : திரு. சுர்ஜித்சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மது விலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத் துறை.

2. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள் பட) ஆட்சி மொழி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வியல், தமிழ் பண்பாடு, விளை யாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற் றும் தொல்பொருள் இயல்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனி கள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல்,சீட்டு நிதி இவை பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப்.

4. வருவாய்த் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. போக்குவரத்துத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :
போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் வீட்டுவசதி.

6. அறநிலையத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :
அறநிலையத் துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள் மற்றும் சின்கோனா.

7. ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. கோ. சி. மணி :
நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப் புறக் கடன் சம்பந்தப்பட்டவை

8. உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. பொன் முத்து ராமலிங்கம் :
உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர்பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள்.

9. வேளாண்மைத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி.

10. பொதுப்பணித் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட), திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் மின்சாரம்.

11. சமூக நலம்-ஊரகத் தொழிற் துறை அமைச்சர். .. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :
சமூக நலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்.

12. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :
மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல்.

13. செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. கே. என். நேரு :
செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம் மற்றும் பால் வளம்.

14. கைத்தறி-நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :
கைத்தறி, நெசவாலைகள், நகர அமைப்பு, நகர்ப்புற மேம்பாடு, இடவசதிக் கட்டுப்பாடு மற்றும் குடிசைமாற்று வாரியம்.

15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :
கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம்.

16. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. கு. சுந்தரம்
ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர். மாண்புமிகு திரு. எல். கணேசன்

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

**Thiru SURJIT SINGH BARNALA**

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister .. THE HON. DR. M. KARUNANIDHI : Public General Administration Indian Administrative Service, District Rdevue, Officers, Police, Finance, Planning Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise.

2. Minister for Education .. THE HON. DR. K. ANBAZHAGAN : Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps., Ex-Servicemen and Archaeology.

3. Minister for Law : .. THE HON. THIRU S. J. SADIQ PASHA : Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits and Wakf.

4. Minister for Revenue .. THE HON. THIRU NANJIL K. MANOHARAN : Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act.

5. Minister for Transport .. THE HON. THIRU M. KANNAPPAN : Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Housing.

6. Minister for Hindu Religious and Charitable Endowments. .. THE HON. THIRU K. P. KANDASAMY : Hindu Religious and Charitable Endowments, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona.

7. Minister for Rural Development and Local Administration. .. THE HON. THIRU KO. SI. MANI : Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Union and Rural Indebtedness.

8. Minister for Food and Co-operation. .. The Hon. Thiru Pon. MUTHURAMALINGAM : Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics.

9. Minister for Agriculture. .. THE HON. THIRU VEERAPANDI S. ARUMUGAM : Agriculture, Agricultural Re-finance, Agricultural Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production.

10. Minister for Public Works. .. THE HON. THIRU DURAIMURUGAN : Public Works, Minor Irrigation including Special Minor Irrigation, Programme Works, Highways and Electricity.

11. Minister for Social Welfare and Rural Industries. .. THE HON. THIRUMATHI SUBBULAKSHMI JAGADISAN : Social Welfare including Children and Women's Welfare, Beggars' Home Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan.



12. Minister for Public Health. .. THE HON. DR. K. PONMUDI ALIAS DEIVASIGAMANI : Public Heath, Medicines, Water Board and Environmental Pollution Control.

13. Minister for Information and Labour. .. THE HON. THIRU K. N. NEHRU : Information and Publicity, Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing, Government Press and Milk.

14. Minister for Handlooms and Urban Development. .. THE HON. THIRU S. THANGAVELU : Handlooms, Textiles, Town Planning, Urban Development, Accommodation Control and Slum Clearance Board.

15. Minister for Animal Husbandry. .. THE HON. DR. K. CHANDRASEKARAN : Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation.

16. Minister for Adi-Dravidar Welfare. .. THE HON. THIRU K. SUNDARAM : Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

Parliamentary Secretary to Chief Minister. THIRU L. GANESAN.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வி. பெ. துரைசாமி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. சா. சிவசுப்பிரமணியன்

திரு. எம். இராமச்சந்திரன்

திரு. ஆ. நடராசன்

பேராசிரியர் க. பொன்னுசாமி

திரு. பி. வி. இராஜேந்திரன்

திரு. செ. நூர்முகமது.

செயலாளர்

திரு. த. ப. டிக்விதுரை

---

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் 21-1-1991 ஆம் நாளன்று அறிவிக்கப் பெற்றது.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு. செ. சு. பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | துணைச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. லா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர். |
| சுவாமிநாதன் திரு. ச., எம். ஏ. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., டி.பி. மற்றும் பி.ஏ. | துணைச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. ப. சி., பி.காம். | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி. பி.எல். | சார்புச் செயலாளர். |
| உமா, திருமதி. வி. நா., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| சாமிநாதன், திரு. கி., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| பவானி சுப்பையா, திருமதி பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| பானுமதி ஆனந்தராஜன், திருமதி, பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |

பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி) —தொடர்ச்சி

| | |
|---|---|
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| முனிர் உன்னிசா, திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| ராஜன், திரு. கே. பி., டி.ஆர்.எஸ். .. | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| அரங்கநாதன் திரு. சு., பி.ஏ., பி.எல். | தலைமை திருபர் (குழுக்கள்). |
| சுந்தரராஜுலு, திரு. துரை, எம்.ஏ. | தலைமை திருபர். |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ., பி.ஏ. .. | தலைமை திருபர். |
| ஜெயதேவ், திரு. பி. சி. .. | தலைமை திருபர். |



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி).

பெயர்களும், தொகுதிகளும்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1. அங்கமுத்து, திரு. கே. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 2. அசேன், திரு. ஜெ. .. | இராணிப்பேட்டை |
| 3. அண்ணாதுரை, டாக்டர் க. | வரகூர் (செ.வ.) |
| 4. அண்ணாதுரை, திரு.கா. .. | பட்டுக்கோட்டை |
| 5. அண்ணாதம்பி, திரு.ஆர். .. | அவிநாசி (செ.வ.) |
| 6. அண்ணாமலை, திரு.எம். .. | அரூர் (செ.வ.) |
| 7. அதியமான், திரு.ஆ. .. | சேடப்பட்டி |
| 8. அப்துல் சமத், திரு. பா. .. | வாணியம்பாடி |
| 9. அப்துல் லத்தீப், திரு.எம். .. | சேப்பாக்கம் |
| 10. அமீது இப்ராகிம், திரு. அ.மு. .. | கடலாடி |
| 11. அர்ச்சுனன், திரு.க. .. | தாரமங்கலம் |
| 12. அழகர்சாமி, திரு.சோ. .. | கோவில்பட்டி |
| 13. அழகுவேலு, திரு.ச. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 14. அறிவழகன், திரு.ஆ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 15. அன்பழகன், டாக்டர் க. .. | அண்ணாநகர் |
| 16. அன்பழகன், திரு.வ. .. | செய்யாறு |
| 17. அன்பில் பொய்யாமொழி, திரு. .. | திருச்சிராப்பள்ளி-2 |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 18. ஆசையன், திரு. பெ. .. | ஆண்டிப்பட்டி |
| 19. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 20. ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 21. ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ. | சேலம்-2 |
| 22. இரகுமான்கான், திரு. அ. | பூங்கா நகர் |
| 23. இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 24. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. | மேலூர் |
| 25. இராசன், திரு. வி.பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 26. இராசு, திரு. வி.கே. .. | அரக்கோணம் (செ.வ.) |
| 27. இராசு, திரு. வெ. .. | குளத்தூர் (செ.வ.) |
| 28. இராசேந்திரன், திரு. அ. .. | போளூர் |
| 29. இராதா, திரு. எஸ்.ஆர். .. | மதுரை கிழக்கு |
| 30. இராதாகிருஷ்ணன், திரு. தே. .. | சோழவந்தான் |
| 31. இராமகிருஷ்ணன், திரு. நா. | கம்பம் |
| 32. இராமசாமி திரு. ஆ.மு. .. | ஆத்தூர் |
| 33. இராமசாமி திரு. கே.ஆர். .. | திருவாடானை |
| 34. இராமசாமி, திரு. கே.வி. .. | கரூர் |
| 35. இராமசாமி, திரு. பொன்னுச்சாமி ப. .. | அரவக்குறிச்சி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 36. இராமசாமி, திரு. வே. .. | திருச்செங்கோடு |
| 37. இராமசுப்பு, திரு. எஸ்.எஸ். | ஆலங்குளம் |
| 38. இராமச்சந்திரன், திரு. எம். | திருவோணம் |
| 39. இராமச்சந்திரன், திரு. வி. .. | மன்னார்குடி |
| 40. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. | விளாத்திகுளம் |
| 41. இராமச்சந்திரன், திரு. செ. | திருப்பரங்குன்றம் |
| 42. இராமச்சந்திரன், திரு. ந... | செஞ்சி |
| 43. இராமநாதன், திரு. மு. .. | கோவை மேற்கு |
| 44. இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர் |
| 45. இராஜேந்திரன், திரு. கே.ஆர். | பர்கூர் |
| 46. இராஜேந்திரன், திரு. பி.வி. | வேதாரண்யம் |
| 47. இளம்வழுதி, திரு. .. | எழும்பூர் (செ.வ.) |
| 48. ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 49. உகம்சந்த், திரு. எஸ்.டி. .. | மதுராந்தகம் |
| 50. உதயசூரியன், திரு. தா. .. | சின்னசேலம் |
| 51. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. | தஞ்சாவூர் |
| 52. ஏகாம்பர செட்டி, திரு. ஆ. | [illegible] |
| 53. கணபதி, திரு. தா. .. | மயிலாப்பூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 54. கணேசமூர்த்தி, திரு. அ. .. | மொடக்குறிச்சி |
| 55. கணேசமூர்த்தி, திரு. நா. .. | குறிஞ்சிப்பாடி |
| 56. கணேசன், திரு. எல். .. | ஒரத்தநாடு |
| 57. கணேசன், திரு. க. சொ. .. | ஜெயங்கொண்டம் |
| 58. கணேசன், திரு. சா. .. | தியாகராய நகர் |
| 59. கணேசன், திரு. வே. .. | மங்களூர் (செ.வ.) |
| 60. கண்ணப்பன், திரு. மு. .. | பல்லடம் |
| 61. கண்ணன், திரு. எஸ். பி. .. | அணைக்கட்டு |
| 62. கண்ணையன், திரு. க. .. | தொட்டியம் |
| 63. கந்தசாமி, திரு. கா. .. | கிணத்துக்கடவு |
| 64. கந்தசாமி, திரு. கே. பி. .. | திருச்செந்தூர் |
| 65. கரீம், திரு. மு. கு. .. | கூடலூர் |
| 66. கருணாநிதி, டாக்டர் மு. | துறைமுகம் |
| 67. கருப்பசாமி, திரு. எஸ். எஸ். | சாத்தூர் |
| 68. கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபநாசம் |
| 69. கஜபதி, திரு. தி. இரா. .. | ஆத்தூர் |
| 70. காஞ்சனா கமலநாதன், டாக்டர் (திருமதி) .. | கிருஷ்ணகிரி |
| 71. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. எஸ். .. | முதுகுளத்தூர் |
| 72. காளியப்பன், திரு. ம. .. | ஒட்டன்சத்திரம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 73. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் துரை. | சிதம்பரம் |
| 74. கிருஷ்ணன், திரு. சி. .. | ஓமலூர் |
| 75. குணசேகரன், திரு. எஸ். | தலைவாசல் (செ.வ.) |
| 76. குமரி அனந்தன், திரு. .. | சாத்தான்குளம் |
| 77. குருநாதன், திரு. க. .. | பாளையங்கோட்டை |
| 78. குருமூர்த்தி, திரு. ஜி. ஜி. .. | பவானி |
| 79. கோதண்டம், திரு. இ. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 80. கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம் |
| 81. கோவிந்தசாமி, திரு. சி. .. | திருப்பூர் |
| 82. கோவிந்தசாமி, திரு. வீ. செ. | காவேரிப்பட்டினம் |
| 83. கோவிந்தராஜன், திரு. சி. .. | நெல்லிக்குப்பம் |
| 84. கோவிந்தன், திரு. வெ. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 85. சண்முகம், திரு. சி. .. | ஆலந்தூர் |
| 86. சந்திரசேகரன், டாக்டர் க. | ஆலங்குடி |
| 87. சந்திரசேகரன், திரு. துரை. | திருவையாறு |
| 88. சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி |
| 89. சம்சுதீன் என்கிற கதிரவன் திரு. கா. மு. | கடையநல்லூர் |
| 90. சம்பத், திரு. ஏ. ஜீ. .. | முகையூர் |
| 91. சற்குணம், திருமதி எஸ். பி. | இராதாகிருஷ்ணன் நகர் |
| 92. சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | உடுமலைப்பேட்டை |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 93. சாந்தகுமாரி, டாக்டர் (திருமதி) த. .. | தாராபுரம் (செ.வ.) |
| 94. சாமிநாதன், திரு. இரா. | திருமங்கலம் |
| 95. சிங்காரம், திரு. இரா. .. | பேராவூரணி |
| 96. சிவசுப்பிரமணியன், திரு. சா. | ஆண்டிமடம் |
| 97. சிவலிங்கம், திரு. எஸ். ஆர். | பனைமரத்துப்பட்டி |
| 98. சிவலோகம், திரு. சோ. .. | புவனகிரி |
| 99. சின்னக்குழந்தை, திரு. மு. | பெரணமல்லூர் |
| 100. சின்னசாமி, திரு. இரா. .. | தர்மபுரி |
| 101. சின்னசாமி, திரு. கா. .. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 102. சின்னசாமி, திரு. வி. கே. .. | பவானிசாகர் |
| 103. சீரங்கன், திரு. மா. .. | மேட்டூர் |
| 104. சீனிவாசன், திரு. பெ. .. | சிவகாசி |
| 105. சுந்தரதாஸ், திரு. மா. | விளவங்கோடு |
| 106. சுந்தரம், திரு. க. .. | பொன்னேரி (செ.வ.) |
| 107. சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம் |
| 108. சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர் |
| 109. சுந்தரராஜ், டாக்டர் ச. | பரமக்குடி (செ.வ.) |
| 110. சுந்தர், திரு. க. .. .. | உத்திரமேரூர் |
| 111. சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. .. | கன்னியாகுமரி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 112. சுப்பிரமணியம், திரு. ஞா. க. | சத்தியமங்கலம் |
| 113. சுப்பிரமணியன், திரு. அ. வெ. | திருநெல்வேலி |
| 114. சுப்பிரமணியன், திரு. வே. நா. | பெருந்துறை |
| 115. சுப்பு, திரு. அ. .. .. | ராசிபுரம் |
| 116. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | ஈரோடு |
| 117. சுப்பையா, திரு. ஆலவாயல் வ. | திருமயம் |
| 118. செங்குட்டுவன், திரு. அ. | மயிலாடுதுறை |
| 119. செல்லை சிவம், திரு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 120. செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிபாளையம் |
| 121. சேட்டு, திரு. எம். .. | செங்கம் (செ.வ.) |
| 122. சொக்கர், திரு. ரா. .. | விருதுநகர் |
| 123. சௌந்திரபாண்டியன், திரு. த. .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 124. டேனியல் ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 125. தங்கபாண்டியன், திரு. வே. | அருப்புக்கோட்டை |
| 126. தங்கம், திரு. அ. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127. தங்கராஜன், திரு. எஸ். ஏ. | திண்டுக்கல் |
| 128. தங்கராசு, திரு. அ. .. | காட்டுமன்னார்கோயில் (செ.வ.) |
| 129. தங்கவேலு, திரு. ச. .. | சங்கரநாயனார்கோவில் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 130. தங்கவேல், திரு. என். .. | குன்னூர் (செ.வ.) |
| 131. தங்கவேல், திரு.மொ. .. | முசிறி |
| 132. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. | இளையாங்குடி |
| 133. தமிழ்மணி, திரு.வீ. .. | செங்கல்பட்டு |
| 134. தம்புசாமி, திரு. வே. .. | திருவாரூர் |
| 135. தயாளன், திரு. ஏ.சி. .. | ஆரணி |
| 136. தனபாலன், திரு.கே.ஆர்.ஜி. | சேலம்-1 |
| 137. தனராஜ், டாக்டர் வி. .. | வந்தவாசி (செ.வ.) |
| 138. திருநாவுக்கரசு, திரு.எஸ். | அறந்தாங்கி |
| 139. திருமூர்த்தி, டாக்டர் து. | திருப்போரூர் (செ.வ.) |
| 140. திருவேங்கடம், திரு.பெ.சு. | கலசப்பாக்கம் |
| 141. துரைசாமி, திரு.வீ.பெ. .. | நாமக்கல் (செ.வ.) |
| 142. துரைபாண்டியன், டாக்டர் பெ. | மானாமதுரை (செ.வ.) |
| 143. துரைமுருகன், திரு. .. | காட்பாடி |
| 144. துரை இராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில் |
| 145. தென்னரசு, திரு.எஸ்.எஸ். | திருப்பத்தூர் |
| 146. தேவராஜ், திரு.வி.எம். .. | வேலூர் |
| 147. நஞ்சப்பன், திரு. ந. .. | பென்னாகரம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 'ந'—தொடர்ச்சி | |
| 148. நடராசன், திரு.ஆ. .. | பேரூர் |
| 149. நடராசன், திரு.பொ. .. | திருத்தணி |
| 150. நடேசன், திரு. இரா. .. | திருவட்டாறு |
| 151. நடேசன், திரு.எகால் மு. | ரிஷிவந்தியம் |
| 152. நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர் கொ. | பண்ருட்டி |
| 153. நாராயணன், திரு. இராம. | தாரைக்குடி |
| 154. நூர்முகமது, திரு. செ. .. | பத்மநாபபுரம் |
| 155. நேரு, திரு.கே. என். .. | லால்குடி |
| 156. பஞ்சாட்சரம், திரு.இரா. | மேல்மலையனூர் |
| 157. பழனிச்சாமி, திரு.க. .. | எடப்பாடி |
| 158. பழனிச்சாமி, திரு.டி.கே. | திருவொற்றியூர் |
| 159. பழனிச்சாமி, திரு.ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ. |
| 160. பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 161. பன்னீர்செல்வம், டாக்டர் மா. | சீர்காழி (செ.வ.) |
| 162. பாண்டியன், திரு.பி.எச். | சேரன்மாதேவி |
| 163. பாப்பா உமாநாத், திருமதி | திருவெறும்பூர் |
| 164. பாப்பா சுந்தரம், திரு.அ. | குளித்தலை |
| 165. பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | பொங்களூர் |
| 166. பாலசுப்பிரமணியன், திரு. அ.வே. | திருநாவலூர் |
| 167. பாலையா, திரு. ஆ. .. | கொளச்சல் |
| 168. பால்ராஜ், திரு. சோ. .. | மதுரை—மையம் |
| 169. பிச்சாண்டி, திரு.கு. .. | திருவண்ணாமலை |
| 170. பிச்சைமுத்து, திரு. செ. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 171. பீட்டர் அல்போன்ஸ், திரு. சா. | தென்காசி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'ப'—தொடர்ச்சி | |
| 172. புகழேந்தி, திரு. இ. .. | கடலூர் |
| 173. பூவராகன், திரு. கோ. .. | விருத்தாசலம் |
| 174. பெரியசாமி, திரு. இ. .. | ஆத்தூர் |
| 175. பெரியசாமி, திரு. என். .. | தூத்துக்குடி |
| 176. பெரியசாமி, திரு. வே. .. | அந்தியூர் (செ.வ.) |
| 177. பெரியண்ணன், திரு. அ. .. | புதுக்கோட்டை |
| 178. பெருமாள், திரு. செ. .. | ஏற்காடு (ம.ப.) |
| 179. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி டாக்டர் க. | விழுப்புரம் |
| 180. பொன்முடி, திரு. த. .. | தண்டராம்பட்டு |
| 181. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 182. பொன்னுசாமி, பேராசிரியர், க. | மருங்காபுரி |
| 183. பொன்னு பிள்ளை, திரு.ஜி. | தேனி |
| 184. மகேந்திரன், திரு. இரா. | நாட்றாம்பள்ளி |
| 185. மணி, திரு. ஆச்சியூர் எம். | நாங்குநேரி |
| 186. மணி, திரு. கே. ஏ. .. | கபிலர்மலை |
| 187. மணி, திரு. கோ. சி. .. | கும்பகோணம் |
| 188. மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ. வ.) |
| 189. மதிவாணன், திரு. இரா. | இராயபுரம் |
| 190. மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 191. மனோகரன், திரு. நாஞ்சில், கி. .. | திருவல்லிக்கேணி |
| 192. மனோகரன், திரு. பா. .. | சிவகங்கை |
| 193. மாசிலாமணி, டாக்டர் ஆர். | திண்டிவனம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| "ம" | |
| 194. மாசிலாமணி, திரு.தி.ரா. | பூந்தமல்லி |
| 195. மாரப்பன், திரு. பெ. .. | காங்கேயம் |
| 196. மாரிமுத்து, திரு. அ. .. | வானூர் (செ.வ.) |
| 197. முகமது சித்திக், திரு. மு. .. | பூம்புகார் |
| 198. முத்துசாமி, திரு. ப. .. | வேடசந்தூர் |
| 199. முத்துராமலிங்கம், திரு. பொன். | மதுரை மேற்கு |
| 200. முத்தையன், திரு. எம். .. | சங்கராபுரம் |
| 201. முத்தையா, திரு.மு. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 202. முருகேசன், திரு. பொ. .. | காஞ்சிபுரம் |
| 203. முல்லைவேந்தன், திரு.வ. | மொரப்பூர் |
| 204. முனிரத்தினம், திரு. ஆ.மு. | சோளிங்கர் |
| 205. முனிரத்தினம், திரு. சீ. ரா. | திருவள்ளூர் |
| 206. மூக்கன், திரு. இரா. .. | உப்பிலியாபுரம் (ம.ப.) |
| 207. மூக்கையா, திரு.எல். .. | பெரியகுளம் |
| 208. மோகன், திரு. இரா. .. | சிங்காநல்லூர் |
| 209. மோசஸ், டாக்டர் எம். .. | நாகர்கோவில் |
| 210. யசோதா செல்லப்பா, திருமதி .. | வலங்கைமான்(செ.வ.) |
| 211. ரமணி, திரு. கே. .. | கோவை கிழக்கு |
| 212. ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம் |
| 213. ரவி அருணன், திரு. கு. .. | அம்பாசமுத்திரம் |
| 214. ராமச்சந்திர ரெட்டி, திரு.ந. | ஓசூர் |
| 215. ராஜு, திரு. எச்.எம். .. | உதகமண்டலம் |
| 216. லட்சுமி, திருமதி பொ. .. | வால்பாறை (செ.வ.) |
| 217. வரதராசன், திரு. இரா. | சங்ககிரி (செ.வ.) |
| 218. வரதராசன், திரு. உ.ரா. .. | வில்லிவாக்கம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| "ம" | |
| 219. வல்லரசு, திரு. பி.என். .. | உசிலம்பட்டி |
| 220. விஜயராகவன், திரு. பொன். | இளையூர் |
| 221. விஜயேந்திரய்யா, திரு. டி.சி. | தளி |
| 222. வீராசாமி, திரு. ஆற்காடு நா. | புரசைவாக்கம் |
| 223. வீரையன், திரு. கோ. .. | நாகப்பட்டினம் |
| 224. வெங்கடாசலம், திரு. பெ. | வீரபாண்டி |
| 225. வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஓய். | ஸ்ரீரங்கம் |
| 226. வெள்ளிங்கிரி, திரு. யூ.கே. | தொண்டாமுத்தூர் |
| 227. வேணு, திரு. இ. .. | கும்மிடிப்பூண்டி |
| 228. வைத்தியலிங்கம், திரு. மீ.அ. | தாம்பரம் |
| 229. ஜெயலலிதா, செல்வி ஜெ. | போடிநாயக்கனூர் |
| 230. ஸ்டாலின், திரு. மு.க. .. | ஆயிரம்விளக்கு |
| 231. ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். .. | சைதாப்பேட்டை |
| 232. வெற்றிடம் .. | இராமநாதபுரம் |
| 233. வெற்றிடம் .. | அச்சரப்பாக்கம் |
| 234. வெற்றிடம் .. | பாலக்கோடு |
| 235. அஸ்கார் செ. நீக்லி, திரு. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

திரு. கு. அழகிரிசாமி .. தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

தை 6, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2022

1991 சனவரி 19, சனிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு".

தான் இருந்த கூடு தனியே இருக்கும்படி அதை விட்டுவிட்டு, பறவை வேறு இடத்திற்குப் பறந்து சென்றுவிடுவதைப் போன்றதுதான் நமது உடம்போடு நம் உயிருக்குள்ள உறவு.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கல் குறிப்புகள்.

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. வி. சா. இளஞ்செழியன் அவர்கள் 14—9—1990ஆம் நாளன்றும், திரு. பி.ஆர். கந்தசாமி கவுண்டர் அவர்கள் 14—12—1990 ஆம் நாளன்றும், திரு. கே. போஜன் அவர்கள் 18—12—1990 ஆம் நாளன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. சா. இளஞ்செழியன் அவர்கள் 1967ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டு வரையிலும், 1971ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டு வரையிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அன்றைய விராலிமலைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள். மேலும், 1977ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டு வரை பாராளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. பி. ஆர். கந்தசாமி கவுண்டர் அவர்கள் 1946ஆம் ஆண்டிலிருந்து 1952ஆம் ஆண்டு வரை பொள்ளாச்சி பொது கிராமப்புற தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கே. போஜன் அவர்கள் 1967ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டு வரை நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நின்றனர்).

## 2. இரங்கல் தீர்மானம்.

### உறுப்பினர் திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினரான திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் அவர்கள் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன், இந்த அவையில் இந்த இரங்கல் தீர்மானத்தைக் கொண்டுவர நேரிட்டதை எண்ணி நான் வருந்துகிறேன்.

"இனிய பண்பும், நல்ல உள்ளமும், செயல் ஆற்றலும் கொண்டவரும், இப்பேரவையில் இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட



உறுப்பினருமாகிய திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் அவர்கள் 2-12-1990 ஆம் நாளன்று மறைந்த துயரச் செய்தி கேட்டு இப்பேரவை வருந்துகிறது.

அன்னாரின் குடும்பத்தினருக்குத் தனது ஆழ்ந்த இரங்கலை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

திரு. ராஜேந்திரன் அவர்கள் இந்த அவையில் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்ற நாள் முதலாக அவையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்றுகிறவராக, கடமை உணர்ந்து செயல்படுகிறவராக, கட்டுப்பாடு மிக்கவராக விளங்கி நம் அனைவருடைய பாராட்டுக்கும் உரியவராகத் திகழ்ந்தார் என்பதை நாம் எல்லோரும் மிக நன்றாக அறிவோம்.

9.05 மணி.

இளமையிலேயே நல்ல கல்வி பெற்று, திருச்சி புனித ஜோசையப்பர் கல்லூரியிலே பட்டம் பெற்று, சட்டக் கல்லூரியிலே பயின்று, வழக்கறிஞராகத் தகுதி பெற்று, தன்னுடைய அறிவால், திறத்தால் மக்களுடைய பாராட்டைப் பெற்றவர், திரு ராஜேந்திரன் அவர்கள். அது மட்டுமல்லாமல் விளையாட்டுத் துறையில் மிகுந்த ஆர்வம் உடையவர். டென்னிஸ், டேபிள் டென்னிஸ் போன்ற விளையாட்டுக்களில் மிகுந்த ஈடுபாடு உடையவர். சட்டமன்ற உறுப்பினராக மட்டுமல்லாமல் இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவராக, இராமநாதபுரம் ரோட்டரி சங்கத்தினுடைய தலைவராக, வேறு பல பொதுப்பணிக்குரிய அமைப்புகளிலே எல்லாம் இடம் பெற்று தொண்டு செய்தவராக விளங்கியவர் அவர். அவருடைய குடும்பமே அப்படிப்பட்ட சிறந்த பணியாற்றுகிற ஆர்வம் உள்ளது. அவருடைய அண்ணன் திரு. சத்தியேந்திரன் அவர்கள் அந்த மாவட்டத்து மக்களுடைய பெரும் அன்புக்கு உரியவராக விளங்கியவர்கள். இன்னொரு தமையன் திரு. மகேந்திரன் அவர்களும் மக்களுடைய பாராட்டைப் பெறக்கூடிய அளவுக்குத் தொண்டு செய்தவர்.

ஆனால் அந்தக் குடும்பத்தினுடைய ஒரு தனிச் சிறப்போ என்று கருதவேண்டிய அளவுக்கு அவருடைய அண்ணன்மார்களும் மிக இளம் வயதிலேயே மறைந்து, இப்போது திரு. ராஜேந்திரன் அவர்களும் தன்னுடைய 42-வது வயதிலே மறைய நேரிட்டுவிட்டது என்பது உள்ளபடியே அந்தக் குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் அந்தப் பகுதியிலே உள்ள பொது நல நோக்குடைய பெருமக்களுக்கெல்லாம் மிகப் பெரிய இழப்பாக ஏற்பட்டு விட்டது.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

என்று சொல்கிற அந்தக் குறள் கருத்தைக்கூட இப்படிப்பட்ட துக்கம் ஏற்படுகிறபோதுதான் நாம் முழு அளவில் உணர நேரிடுகிறது. அதேபோல் "அடக்கம் அமரருள் உய்க்கும்"

என்று வள்ளுவர் சொன்னார். அடக்கம் உடையவர்களுக்கு இப்படியும் ஒரு நிலை ஏற்படுவதை அந்தக் குறள் மூலமாக நாம் எண்ணிப்பார்க்கலாமோ என்று தோன்றுகிறது. அந்த வகையிலே எல்லாம் நம்முடைய எண்ணத்திலே இரண்டறக் கலந்து இருக்கக் கூடிய அளவுக்குச் சிறந்த பணியாற்றிய, அன்புடையவராக விளங்கிய நம்முடைய அருமைச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் அவர்களை இப்போது இழந்திருக்கிற நிலையில் நம்முடைய ஆழ்ந்த துயரத்தை இந்த அவையின் சார்பில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறோம். நானும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு முன்னவர் என்ற முறையில் இரங்கல் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இன்று திரு. வி. எஸ். இளஞ்செழியன், திரு. பி. ஆர். கந்தசாமி கவுண்டர், திரு. கே. போஜன் ஆகியவர்களுடைய மறைவு குறித்து இரங்கல் குறிப்புகள் குறித்தும், நமது அவையிலே, உறுப்பினராக நம்மோடு இருந்த திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் அவர்களுடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கிற அவைத் தலைவருடைய உணர்வோடும், அவை முன்னவர் அவர்கள் சொல்கிற கருத்தோடும் என்னுடைய கருத்தையும் சொல்வதற்காக நான் இங்கே நிற்கிறேன்.

இதிலே திரு. வி. எஸ். இளஞ்செழியன் அவர்கள் மறைவும் நமக்கு வருத்தம்தான். அவரும் நல்ல முறையில் சமுதாயப் பணியாற்றியவர்.

அதைப்போல் திரு. பி. ஆர். கந்தசாமி கவுண்டர் அவர்கள் அன்னை பாரதமாதாவின் அடிமை விலங்கை உடைத்தெறிவதற்கு வீரப்போர் நிகழ்த்தி சிறை இருந்த ஒரு தியாகச் செம்மல். அவர் பொள்ளாச்சி வட்டாரத்திலே மக்கள் தொண்டாற்றி எங்கள் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராகப் பணிபுரிந்தவர். மாவட்ட காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவராக இருந்தவர். அவருடைய மறைவும் நமது நெஞ்சத்தில் நீங்காத வருத்தத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

திரு. கே. போஜன் அவாகள் நீலகிரி மாவட்டத்தில் பழங்குடி மக்களுடைய மத்தியிலே மிகுந்த சேவை செய்த ஒரு அருமை யான தளபதியாக இருந்தவர். அவருடைய மறைவும் நமது நெஞ்சத்திலே ஆழமான துயரை ஏற்படுத்தி இருக்கிறது.

திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் அவர்கள், நமது முன்னவர் அவர்கள் கூறியதைப் போலே, ஒரு சிறந்த செல்வாக்கு மிக்க குடும்பத்திலே பிறந்தவர். அவருடைய உடன்பிறப்புக்கள் அத்தனைபேருமே சமுதாயப் பணியை ஆற்றிக் கொண்டிருந்த



வர்கள். அவர்களும் சமுதாயப் பணி ஆற்றிக்கொண்டிருந்த நேரத்தில் மறைந்தார்கள். அதற்குப் பிறகு திரு. ராஜேந்திரன் அவர்கள் இறந்தது 2-12-1990 என்றால் அவர் பிறந்தது 15-9-1948 என்று குறிப்பு சொல்கிறது. அவர் தனக்குத் தலைவராக ஏற்றுக் கொண்ட பேரறிஞர் அண்ணா பிறந்த, அதே செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி பிறந்திருக்கிறார். அவர் தன்னுடைய கட்சிக்கு மட்டுமல்லாது, கட்சிக்கு மட்டும் தொண்டு செய்வதோடு நில்லாது, நகரசபைத் தலைவராகவும் இருந்து பணிபுரிந்திருக்கிறார். ரோட்டரி சங்கத்தினுடைய தலைவராக இருந்து பணிபுரிந்திருக்கிறார். இந்த இளம் வயதிலேயே அவருடைய குடும்பத்திலே பலர் மறைந்திருப்பதை எண்ணுகிற போது உமர்கயாம் சொன்னதைப்போலே,

''எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதியெழுதி மேற்செல்லும்.''

என்று சொல்கிற நிலை இங்கே ஏற்பட்டிருக்கிறதோ என்று நினைக்கிறேன். இனிமேலாவது அது மேற்செல்லாமல் இத்தோடு நின்றுவிடும் என்று நாம் எல்லாம் எதிர்பார்ப்போமாக.

9.10 மணி

அன்பிற்குரிய ராஜேந்திரன் அவர்கள் மறைந்திருக்கின்ற நிலையை நாம் இன்று எண்ணிப் பார்க்கின்றபோது, இப்படிப் பட்ட ஒரு இழப்பு அந்தக் குடும்பத்திற்கு ஏற்பட்டிருப்பதை நினைத்தும், இப்படிப்பட்ட இழப்பு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்பட்டிருப்பதை நினைத்தும் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, ஒரு புலவர் பாடியது போல,

''கல் அறுப்பதற்கு ஒரு காலம் உண்டு
கனி அறுப்பதற்கு ஒரு காலம் உண்டு
புல் அறுப்பதற்கு ஒரு காலம் உண்டு
நெல் அறுப்பதற்கு ஒரு காலம் உண்டு
கண்ணில்லாத காலன் உயிரறுப்பதற்கு
காலமே பார்ப்பதில்லையே''

என்று இளமையிலேயே அறுத்தெடுத்து, நம்மிடமிருந்து பிரித் தெடுத்துக் கொண்டு போய்விட்ட அந்தக் காலனுடைய கொடு மையை நினைத்து அவரை இழந்து துடித்துக் கொண்டிருக்கின்ற அவருடைய குடும்பத்தாருக்கும், அவரை இழந்திருக்கின்ற அன்பர்களுக்கும், என்னுடைய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, இறந்து போனவருக்கு அஞ்சலி செலுத்தி அமைகிறேன்.

திரு. கே. ரமணி: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, நம்
மாமன்றத்தில் பணியாற்றி காலம் சென்றிருக்கும்படியான திரு.
வி. எஸ். இளஞ்செழியன், திரு. பி. ஆர். கந்தசாமி கவுண்டர்,
திரு. கே. போஜன் ஆகியோர்களுடைய மரணத்தைப்பற்றி
தாங்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்த அவையிலே வீற்றிருந்து,
தமிழக மக்களுடைய நன்மைக்காகப் பலவிதத்திலும்
பாடுபட்டவர் திரு. பி. ஆர். கந்தசாமி கவுண்டர்; அவர்களைப்
பற்றி நானும் தெரிந்துள்ளவன்தான். அப்படிப்பட்டவருடைய
மரணம் நம் உள்ளத்திலே ஒரு பெரிய வேதனையை உருவாக்கு
கிறது.

அடுத்தபடியாக, திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் அவர்கள
42 வயதுடையவர். அவருடைய வாழ்நாளிலே பாதி நாள்கூட
ஆகாத ஒரு இளம் வயதினர். அந்தக் காலத்திலேயே அவர்
நன்றாகப் படித்து பட்டம் பெற்று அரசியல்வாதியாகவும்
இருந்து நன்கு செயல்பட்டவர். அவர் பல விளையாட்டுகளிலும்,
இன்னும் பல்வேறு பொது ஜன தொண்டிலும் நன்கு ஈடுபட்டவர்.
அப்படிப்பட்ட சிறந்த ஊழியர்கள் மேலும் மிக உயர்ந்த மட்டத்
திற்கு வளர்ச்சியடைய வேண்டியவர்கள். அப்படிப்பட்ட ஒரு
தன்மையில் உள்ள திரு. ராஜேந்திரன் அவர்கள், அதுவும்
திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒரு நல்ல ஊழியராக
இருந்து செல்வாக்காக இருந்து, மரணம் அடைந்தது ஒரு மிகப்
பெரிய ஆற்ற முடியாத துயரத்தை அந்தக் குடும்பத்திற்கு
ஏற்படுத்தியுள்ளது. அவர் மட்டுமல்ல, அதற்கு முன்னால்
அவருடைய தமையன்மார்களும் இதுமாதிரிதான் உயிரிழந்திருக்
கின்றார்கள். கடைசியாக அந்தக் குடும்பத்திலே இருந்த அவரும்
போய்விட்டார் என்பது ஒரு ஆற்ற முடியாத, -டு கட்ட முடியாத
துயரம். அப்படிப்பட்ட துயரத்திலே ஏற்பட்டிருக்கும்படியான
அந்தக் குடும்பத்திற்கு நமது துயரத்தையும் இணைத்துக்
கொண்டு, நம்முடைய அவை முன்னவர் அவர்கள் இங்கே முன்
மொழிந்துள்ள அந்தத் தீர்மானத்தோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சி தன்னையும் இணைத்துக் கொள்கிறது என்று கூறி,
முடித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவரவர்
களே, நம்முடைய உறுப்பினராக இருந்த இராமநாதபுரம் சட்ட
மன்ற உறுப்பினர் திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் அவர்கள்
இன்றைக்குச் சமுதாயப் பணியாற்றுவதற்கு இந்த நாட்டில்
இல்லாமல் பிரிந்து விட்டார்கள். சமுதாயப் பணியாற்றக்கூடிய
வர்கள் இன்றைக்குத் தோன்றுவது கடினம். சமுதாயத்தைப்
பற்றி சிந்திக்கக்கூடிய கடினமான கால கட்டத்தில் சமுதாயப்
பணிக்காக அவர்கள் தன்னுடைய குடும்பத்தையே அர்ப்பணித்து,
எதிர்பாராத விதமாக 42 வயதிலேயே இறந்திருக்கிறார்கள்
என்றால் அது நமது அவைக்கும், நாட்டிற்கும், அந்தத்
தொகுதிக்கும் ஒரு பேரிழப்பாகும். அந்தத் தொகுதி சட்டமன்ற
உறுப்பினர் என்ற முறையில், அவர் தன்னுடைய தொகுதிக்கு நல்ல



பணியாற்றி இருக்கின்றார். எல்லோருடனும் இனிது பழகியிருக்
கிறார். அவர் நல்ல பண்புகளை கொண்டிருந்தார் என்பதை நாம்
எல்லோரும் உணர்வோம். அப்பேர்ப்பட்டவருடைய இந்த
இரங்கல் தீர்மான நிகழ்ச்சியில் நாம் எல்லோரும் இன்றைக்கு
அவருக்கு அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கிறோம். அவரை
யாரும் வெறுக்க மாட்டார்கள். அவரை யாரும் வெறுக்கக்
கூடிய அளவிற்கு அவருடைய இனிய பண்பு நிச்சயமாக இடம்
கொடுத்திருக்காது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆகவே,
நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த திரு. எம்.
எஸ். கே. ராஜேந்திரன் அவர்களைப் போல இன்னும் தமிழகத்
தில் இளைஞர்கள் தோன்றுவதற்கு காலகட்டம் இருந்தாலும்,
இன்றைக்கு அவருடைய இழப்பு நாட்டுக்கு, சமுதாயப் பணிக்கு
ஏற்பட்ட ஒரு பேரிழப்பாகும்.

9-15 மணி

அவர் இனிய பண்பாளர். நான் அவரோடு ஓரிரு முறை
பேசியிருக்கிறேன். அமைதியானவர்; சமாதானமாகப் பேசக்
கூடியவர்; யாருடைய பெரு மதிப்பையும் எதிர் நோக்காதவர்.
அப்பேர்ப்பட்ட ஓர் இளைய சட்டமன்ற உறுப்பினர், சமுதாயத்
தில் மூத்தவர், இளம் வயதிலேயே மறைந்திருக்கிறார் என்றால்
உண்மையிலேயே நம்முடைய தமிழகத்திற்கு, தமிழக மக்களுக்கு,
அவர் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு,
குறிப்பாக டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, முதலமைச்சர் அவர்
களுக்கு இழப்பு ஆகும். ஆகவே, அனைத்து இந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக ஜானகி அணியின் சார்பில்
அஞ்சலியை செலுத்தி, என்னுடைய சார்பிலும் அவருடைய
குடும்பத்தினருக்கு அஞ்சலியை செலுத்துகின்றேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர்
அவர்களே, இன்றைய தினம் இந்த இரங்கல் தீர்மானத்தை
முன்மொழிந்து சட்டப்பேரவை முன்னவர் டாக்டர் அன்பழகன்
கூறியது போல நானும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.
காரணம் என்றாவது எல்லா உயிர்களுக்கும் ஏற்படுகிறதுதான்
மரணம். அதுமாதிரிதான் மனித ஜென்மத்துக்கும் மரணம் ஏற்
படுகிறது. இருந்தாலும் காலம், அகாலம் என்று இரண்டு இருக்
கிறது. வயது முதிர்ந்ததாலே நடக்க முடியாமல் படுத்த படுக்கை
யிலே இருக்கும்போது எல்லோரும் போக மாட்டானா என்று
சொல்லும்படியான எத்தனையோ ஜென்மங்கள் இருக்கின்றன.
அதுபோல இளம் வயதிலேயே போய் விட்டானே என்று சொல்
கிறோம். அதனாலேதான் எல்லோருடைய வீடுகளிலும் அழு
கிறோம். எல்லோருடைய வீடுகளிலும் இத்தகைய சம்பவங்கள்
உண்டு. இருந்தாலும் 42 வயதிலேயே அவருடைய மரணம்
நிகழ்ந்திருக்கிறது. இளம் வயதிலேயே திரு. எம். எஸ். கே.
ராஜேந்திரன் அவர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள் என்
றால், அவருடைய ஆவி பிரிந்திருக்கிறது என்றால் அது ஏன்
என்று தெரியவில்லை. அதற்குத் தெய்வம்தான் பதில் சொல்ல
வேண்டும். தர்மராஜா என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

எப்படித்தான் பெயர் வைத்தார்களோ? இம்மாதிரி இளம் வயதிலே உள்ளவர்களை எடுப்பதுதான் தர்மமா? இல்லை, எங்களைப் போன்ற 76, 80 வயதில் உள்ளவர்களை எடுப்பது தான் தர்மமா? எது தர்மம் என்று அவருக்குத்தான் தெரியும். ஏன் என்றால் அவர்தான் தர்மராஜா என்று பெயர் பெற்றிருக் கிறாரே.

மறைந்த உறுப்பினருடன் சட்டமன்றத்தில் பழகியிருக் கிறேன். இருந்தாலும் கடைசியாக கீழக்கரையில் நாங்கள் எல் லாம் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியின்போது அவருடைய குடும்பத்தைப் பற்றி எல்லாம் அன்றைக்குப் பேசிக் கொண் டிருந்தோம். அவருடைய குடும்பத்தில் உள்ளவர்களுடைய பெயரில் எல்லாம் ஒரே இந்திரன் மயம். செல்வேந்திரன், சத்தியேந்திரன் என்று 'இந்திரன்' பெயர் வைக்கும் அளவுக்கு அவருடைய குடும்பம் நல்ல குடும்பம். அது அவருடைய குடும் பத்திற்குத் தகும். எந்தக் கோஷ்டி மனப்பான்மையும் இல்லாமல் கட்சி மனப்பான்மையும் இல்லாமல் பாடுபடக்கூடிய அவருடைய குடும்பத்திற்கு இந்திரன் என்ற அந்தப் பெயர் தகும். அது போல மகேந்திரன் என்கிற பெயர்.

இந்திரனுக்கு உள்ள வாய்ப்பு, விசாலமான மனப்பான்மை எல்லாம் திரு. ராஜேந்திரனுடைய குடும்பத்திற்கு உண்டு. அப்படிப்பட்ட ஒரு நல்ல குணம் படைத்தவர் அவர். அவர் குடும்பத்தினர் கட்சி மாறவில்லை, பாருங்கள். ஆனால் இன்றைக்கு நாம் பார்க்கிறோம். இன்று அண்ணா கொள்கை என்கிறார்கள். நாளைக்கு காமராஜர் கொள்கை என்பார்கள். இன்றைக்கு ஒரு கொள்கை, நாளைக்கு ஒரு கொள்கை. இது எல்லாம் அவரிடம் கிடையாது. அவருக்கு ஒரே கொள்கைதான் இருந்தது. முதலில் எந்தக் கொள்கையை கடைப்பிடித்தாரோ அதைத்தான் கடைசி வரை கடைப்பிடித்தார். எந்தப் புருஷனை முதலில் கல்யாணம் பண்ணினாளோ, கடைசிவரை அவனே புருஷன் என்பதுபோல, கடைசிவரை அதில் எந்த மாற்றமும் இல்லாமல் இருந்தார். அது ஒரு வரவேற்கக் கூடிய கொள்கை அல்லவா? எப்படி இருந்தாலும் நாம் அவரை எமனுடைய வாய்க்குப் பலி கொடுத்து விட்டோம். கால மரணம் இல்லாது அகால மரணம் அடைந்த திரு. ராஜேந்திரன் குடும்பத் திற்கு, ஜனதா தன் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவருடைய கொள்கை நல்லபடியாக எல்லோரும் ஏற்றுக் கொள் ளக்கூடியது என்று குறிப்பிட்டு, நான் விடைபெறுகின்றேன்.

9-20 மணி

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இந்த இரங்கல் தீர் மானத்தை முன்மொழிந்து தெரிவித்த கருத்துக்கள், இந்த அவையினுடைய ஒட்டுமொத்தமான கருத்துக்களைப் பிரதி பலிப்பதாக அமைந்திருந்தன. திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன்



அவர்கள் இந்த அவையில் இடம் பெற்றிருந்த இளைய உறுப்பினர்களிலே ஒருவராகத் திகழ்ந்தார். சிறந்த அரசியல் பாரம்பரியம், சமுதாயத் தொண்டில் அர்ப்பணித்துக் கொண்ட சமுதாய ஆர்வமுடைய பாரம்பரியம் உள்ள குடும்பத்தைச் சார்ந்திருந்தவர் சகோதரர் ராஜேந்திரன் அவர்கள். அவருடைய தமையனார் எம். எஸ். கே. சத்தியேந்திரன் அவர்களும் இந்த அவையிலே நம்மோடு பணியாற்றியவர்கள். அவர் எப்படி இனிய பண்போடு எல்லா மக்களையும் அணைத்துச் சென்றாரோ அதே பாரம்பரியத்தில் அவருடைய மற்றொரு தமையனார் [மகே]ந்திரன் அவர்களும் திகழ்ந்தார்கள். அந்தக் குடும்பத்தில் [த]மையனார்கள் மறைந்த குறையைப் போக்குவதற்கு திரு. ராஜேந்திரன் அவர்கள் இருந்தார்கள். ஆனால் இறைவனு டைய நாட்டம், அவர்கள் எதிர்பாராத விதத்தில் மறைந்து விட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கீழக்கரைக்கு, ஒரு மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்ற நேரத்திலே கூட அவர்கள் அந்த மாநாட்டிற்கு வருகை தந்திருந்தார்கள். முதல்வர் அவர்களோடு தொடர்ந்து அவர்களும் அந்தப் பயணத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அங்கே தான் நான் கடைசியாக அவர்களைச் சந்தித்தது. அவர் இனிய பண்பாடு உடையவர். எப்போதும் தென்றலாகவே காட்சி அளிக்கக் கூடியவர். நக ராட்சி மன்றத்தினுடைய தலைவர் என்ற முறையில் எல்லா உறுப்பினர்களோடும் மிக இணக்கமான உறவு கொண்டு, உறுப் பினர்கள் அனைவரும் மகிழ்ந்திடும் வகையில், அவர்களிடத்திலே பொதுவானதொரு அணுகுமுறை வைத்துக்கொண்டு செயல் பட்டவர் அருமைத் தம்பி ராஜேந்திரன் அவர்கள். அவருடைய மறைவு எதிர்பாராத ஒன்று என்றிருந்தாலும், நடந்துவிட்ட ஒன்று. அதுதான் உண்மை என்ற அளவுக்கு அவர்களுக்கு நாம் இரங்கலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு முதலமைச்சரவர்களும், அமைச்சர் பெரு மக்களும், திராவிட முன்னேற்றக் கழக தள நாயகர்களும் அவ ருடைய வீட்டுக்கே சென்று தங்களுடைய இரங்கலைத் தெரிவித் திருக்கிறார்கள். நான்கூட என்னுடைய இரங்கலைத் தெரிவிக்க அவர்களுடைய வீட்டுக்குச் சென்று இருந்தேன். அங்கே மூன்று படங்களை வைத்திருந்தார்கள். பார்க்கும்போதே மனதை மிகவும் வேதனை அடையச் செய்த காட்சி அது. சத்தியேந்திரன் படம், மகேந்திரன் படம், ராஜேந்திரன் படம்—மூன்று படங் களையும் வைத்து, ஒரு மூதாட்டியார், அவருடைய துணைவி யார் எல்லோரும் அமர்ந்து, அந்தப் படங்களை உற்று நோக்கிக் கொண்டு, துயரம் கலந்து இருந்தது நம்முடைய உள்ளங்களை எல்லாம் வேதனை அடையச்செய்தது. நான் நேரடியாகச் சென்று என்னுடைய இரங்கலைத் தெரிவித்திருக்கிறேன். இருந்தாலும்

இந்த அவையினுடைய மரபை ஒட்டி, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக்கொண்டு, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக மறைந்தவருடைய குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர்—அவை முன்னவர் அவர்களுக்கும், தலைவர்—முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்து அமைகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இரங்கல் தீர்மானத்தோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பில் எங்களது இரங்கலையும் இணைத்துக் கொள்கிறேன். மறைந்த இராமநாதபுரம் தொகுதியுனுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜேந்திரன், மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வி. எஸ். இளஞ்செழியன், திரு. பி. ஆர். கந்தசாமி கவுண்டர், திரு. கே. போஜன் ஆகியோரைப் பிரிந்து வாடுகின்ற அவர்களுடைய குடும்பத்தினருக்குக் கழகத்தின் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-25 மணி

திரு. இளஞ்செழியன் இங்கே குறிப்பிடப்பட்டது போல இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகவும், 1977இல் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்து புதுக்கோட்டை மாவட்ட வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். 1977 இல் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டிலேயே மிக அதிகமான வாக்கு வித்தியாசத்திலே, சுமார் 3 இலட்சம் வாக்கு வித்தியாசத்திலே வெற்றி பெற்றவர். இந்திய அளவிலே மூன்றாவது மிகப் பெரிய அளவிலான வித்தியாசத்தைப் பெற்று, புதுக்கோட்டை மாவட்ட மக்களின் அன்புக்கும் பாத்திரமாகத் திகழ்ந்தவர். அந்த மாவட்ட வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். அவரைப் பிரிந்து வாடுகிற அவருடைய குடும்பத்தினருக்கு இந்த அவையின் மூலமாக என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் திரு. பி. ஆர். கந்தசாமி கவுண்டர், திரு. கே. போஜன் ஆகியோருடைய குடும்பத்தினருக்கும் கழகத்தின் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகவும் அந்த நகர்மன்றத்தினுடைய தலைவராகவும் மிக இளம் வயதிலேயே பொறுப்பேற்று, அந்தப் பகுதி மக்களுக்காக மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர் திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் அவர்கள். சமீபத்தில் நான் இராமநாதபுரத்தில் ஒரு பொதுக்



கூட்டத்திற்குச் சென்றபோது அவர்களுடைய இல்லத்திற்குச்
சென்று இரங்கலைத் தெரிவித்துவிட்டு, அங்கு நடைபெற்ற
பொதுக் கூட்ட நிகழ்ச்சியில் திரு. ராஜேந்திரன் அவர்கள் பெய
ரைக் குறிப்பிட்டபோது அங்கு கூடி இருந்த பொதுமக்கள் அவர்
பெயரைச் சொன்னமாத்திரத்திலேயே அவருக்கு அன்பு காட்டு
கிற, மரியாதை காட்டுகிற விதத்திலே கரவொலி எழுப்பியது.
அந்தத் தொகுதி மக்களிடத்திலே கட்சிக்கு அப்பாற்பட்டும் சாதி
மத உணர்வுகளுக்கு அப்பாற்பட்டும் ஒரு ஈடுபாட்டையும் மரியா
தையையும் அவர் பெற்று இருந்தார் என்பதற்கு எடுத்துக்காட்
டாக இருந்தது. அவருடைய வீட்டிலே இருந்தோர் " நாங்கள்
யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்ததில்லை ; தொடர்ச்சியாக
எங்கள் குடும்பத்துக்கு இப்படிப்பட்ட சோதனை வருகிறதே "
என்று கூறி வருந்தியது மிகவும் வேதனையாக இருந்தது. ஒரு
தொகுதியில், தொகுதி மக்களுக்குப் பணியாற்றுவதிலும் அந்தத்
தொகுதி மக்களுடைய அன்பை,ஆதரவைப் பெறுவதிலும் திரு.
ராஜேந்திரன் ஒரு எடுத்துக்காட்டான சட்டமன்ற உறுப்பினரா
கத் திகழ்ந்து இருக்கிறார். அவர் மிக அமைதியானவர். அடக்க
மானவர். பழகுவதற்கு இனியவர். அவரை இளம் வயதிலேயே
இயற்கை பொதுவாழ்விலிருந்து பிரித்துச் சென்றது மிகவும் துர்ப்
பாக்கியமானது. அவரைப் பிரிந்து வாடுகிற அவருடைய குடும்
பத்தினருக்கு கழகத்தின் சார்பில் என்னுடைய இரங்கலை
இணைத்துக்கொண்டு, அமர்கிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இந்த அவை
யிலே இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்து இருக்கிறார்கள்.
திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் அவர்கள் நம்மோடு சட்டப்
பேரவை உறுப்பினராக இருந்து மக்களுக்குப் பணியாற்றியவர்.
இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்களிலே—அவர் வருகிற
போது மிகக் கண்ணியத்தோடும், அடக்கத்தோடும், உண்மையி
லேயே தன்னடக்கத்தோடும் அவர் வந்து சென்று கொண்டிருந்
தார். அவர் மறைந்த செய்தியைப் பத்திரிகையிலே பார்த்த
உடனே நான் மிகவும் அதிர்ச்சிக்கு உள்ளானேன். திரு. எம். எஸ்.
கே. ராஜேந்திரன் அவர்கள்—அவை முன்னவர் அவர்கள் அறிவித்
தது போன்று—தன்னுடைய சகோதரருக்கு ஏற்பட்ட நிலை
தனக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகத் தன்னுடைய இல்லத்
தைக் கூட மாற்றி இருக்கிறார். அப்படியும், இயற்கை அவரை
விட்டுவைக்கவில்லை ; அவருக்கு இப்படிப்பட்ட ஒரு துயரமான
நிகழ்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. அரசியலில் பல்வேறு நயர்கள்
வாழ்ந்து இருந்தாலும் கூட, சமுதாயப் பணிக்காக ஒரு குடும்
பத்தையே அர்ப்பணித்து இருக்கின்ற அந்தக் குடும்பத்தில் திரு.
எம். எஸ். கே. ராஜேந்திரன் ஒருவராக இருந்து இறந்திருக்கிறார்
என்பதுதான் வருத்தமாக இருக்கிறது. அவரை இழந்து தவிக்கக்
கூடிய அந்தக் குடும்பத்திற்கும், அவரைச் சார்ந்து இருக்கக்
கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு இதற்கு

முன்னால் இந்தச் சட்டப் பேரவையில் மக்களுக்காகப் பணி
யாற்றிய சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. வி. எஸ். இளஞ்
செழியன், திரு. பி. ஆர். கந்தசாமி கவுண்டர், திரு. கே.
போஜன் ஆகியோருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக
இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன்.

9-30 மணி

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த அவையில் சமுதாய, அரசியல்
பணிகளை நாட்டிற்காக ஆற்றிய திரு. இளஞ்செழியன், திரு.
கந்தசாமி கவுண்டர், திரு. போஜன் ஆகியவர்களுடைய
மறைவுக்காக உறுப்பினர்கள் தங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை
அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கே உரையாற்றிய உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்
டதைப் போல இளஞ்செழியன் அவர்கள் இந்த மாமன்றத்திலே
இருமுறை உறுப்பினராகப் பொறுப்பேற்று, பின்னர் அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே தன்னை
இணைத்துக் கொண்டு சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்து,
பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் வெற்றி பெற்று
நாட்டுப் பணியாற்றியவர்.

திரு. கந்தசாமி கவுண்டர், திரு. போஜன் ஆகியோர் நாட்டு
விடுதலைக்காக நடைபெற்ற போராட்டங்களில் தங்களை
இணைத்துக் கொண்டு, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே
சமுதாயப் பணியும், நாட்டுப் பணியும் ஆற்றியவர்கள். அவர்
களுடைய மறைவுக்காக இந்த அவை தெரிவித்துள்ள ஆழ்ந்த
இரங்கல் உணர்வோடு என்னுடைய உணர்வுகளையும் இணைத்
துக்கொள்கிறேன்.

அண்மையில், இந்தச் சட்டப் பேரவையினுடைய உறுப்பின
ராக நம்மோடு இருந்து திடீரென மறைந்துவிட்ட திரு. எம்.
எஸ். கே. ராஜேந்திரன் அவர்களுடைய அருங்குணங்களைப்
பற்றியெல்லாம் இன்று நம்முடைய அவை முன்னவர் பேராசிரியர்
அவர்களும், தொடர்ந்து இரங்கல் உரையாற்றிய எல்லாக் கட்சி
களைச் சேர்ந்த உறுப்பினர்களும் எடுத்துரைத்திருக்கிறார்கள்.
ஒரு குடும்பத்தில் நான்கு விதவைகளைச் சந்திக்கின்ற ஒரு துர்ப்
பாக்கியம், அந்தக் குடும்பமும் இணைந்திருக்கின்ற பெரும்
குடும்பமாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்
பட்டுள்ளதே என்பதை எண்ணிப்பார்க்கும்போது கண் கலங்
காமல் இருக்க முடியவில்லை.

சத்தியேந்திரன், மகேந்திரன், ராஜேந்திரன் என்ற இந்த
மூன்று காளையரைப் பெற்ற அவருடைய தந்தையாரும் கூட
இவர்களைப் போலவே மாரடைப்பின் காரணமாக திடீரென்று





மறைந்து போனவர். இப்படி அந்தக் குடும்பத்திற்கே—புராணிகர்
களுடைய பாஷையிலே சொல்ல வேண்டுமானால்—சாபக்
கேடு என்பதைப் போல, நாங்கள் அவர்களது இல்லத்திற்குச்
சென்று ஆறுதல் சொல்லும்போது அவர்கள் எடுத்துரைத்தார்
களே—''நாங்கள் யாருக்கும் கெடுதல் செய்யவில்லையே ! என்று
அவரது குடும்பத்தினர் சொன்னார்கள். எங்களுக்கு இந்தத்
தண்டனையா ?'' என்றும் கேட்டார்கள் ; அதை எண்ணி,
எண்ணி உருகத்தக்க அளவிற்கு ஒரு புயலே வீசிவிட்டது. அடுக்
கடுக்கான துன்பங்களை அந்தக் குடும்பம் தாங்கிக் கொண்டிருக்
கிறது. இந்த மன்றத்தில் மிக இளைஞர்களிலே ஒருவராக
இருந்து பணியாற்றியவர் தம்பி ராஜேந்திரன். நம்முடைய
நண்பர் அப்துல் லத்தீப் இங்கே குறிப்பிட்டதைப் போல அவர்
மறைவதற்கு ஒரு வார காலத்திற்கு முன்புதான் கீழக்கரையில்
நடைபெற்ற ஒரு தொழில் சார்ந்த மாநாட்டுக்கு நான் சென்
றிருந்தேன். அந்த மாநாட்டுக்கு ராஜேந்திரனும் வந்திருந்தார்.
என்னை வழி அனுப்பி வைக்க மதுரை வரையிலே அவர் வந்தார்.
அவருடைய அண்ணன் சத்தியேந்திரன் நினைவாக கொடி ஒன்
றினை நினைவுக் கம்பத்தில் ஏற்றிடுமாறு என்னை அன்போடு
பணித்தார். அந்த அன்பு ஆணையை நான் ஏற்றுக்கொண்டு
அதைச் செய்துவிட்டுத் திரும்பினேன். ஆனால் ஒரு வார காலத்
திற்குள்ளாக திடீரென்று நம்மை விட்டு அவர் பிரிந்துவிட்டார்.

ஒன்றை இங்கே நான் சொல்ல வேண்டும். ஒருவருடைய
மறைவு அவருடைய மறைவுக்குப் பிறகும் பயன் அளிக்கக் கூடிய
தாக இருக்க வேண்டும் என்பதற்காக நான் சொல்ல விரும்பு
கிறேன். மகேந்திரன் பந்து விளையாடிக் கொண்டிருக்கும்போது
மார்பில் வலி ஏற்பட்டு, அயர்ந்து உட்கார்ந்துவிட்ட நிலயில்
இத்துடன் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் என்று நண்பர்கள் கூறி
யும் கூட கேட்காமல் மீண்டும் பந்து ஆடிய காரணத்தால் மீண்
டும் வலி ஏற்பட்டு, மறைந்து போனார்.

9-35 மணி

சத்தியேந்திரன், இதயத்திலே அவருக்குச் சிறு கோளாறு
இருக்கிறது. அது அகற்றப்படுவதற்குத் தகுந்த சிகிச்சை செய்ய
வேண்டுமென்று டாக்டர்கள் எடுத்துரைத்தும், அதற்கான
எல்லா வாய்ப்பு வசதிகளையும் செய்து கொடுக்கக் கழகமே
கூடத் தயாராக இருக்கிறது என்று நானும், அவரோடு நெருங்கிப்
பழகுகின்ற நண்பர் தென்னரசும், நம்முடைய பேராசிரியர்
போன்றவர்களும் எடுத்துரைத்தும் கூட, அந்த மருத்துவ
சிகிச்சையை அவர் ஏற்றுக்கொள்ள காலதாமதம் செய்து
கொண்டே இருந்த காரணத்தாலும், கழகப் பணியாற்றுவதற்
காக விமானத்திலே வந்திருக்கலாம் ; அல்லது ரயிலிலே வந்
திருக்கலாம். அப்படி வராமல் காரிலேயே சென்னைக்கு வந்து

[டாக்டர் மு. கருணாநிதி] [1991 சனவரி 19

விட்டு எவ்வளவு சொல்லியும் கேட்காமல் காரிலேயே ராமநாதபுரம் சென்று, சென்றடைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் மாரடைப்பிலே காலமானார் என்பதும் எல்லோருக்கும் தெரிந்ததாகும். இப்படி அந்தக் குடும்பத்திலே தந்தை, சகோதரர்கள் இவர்களுக்கு எல்லாம் ஏற்பட்டதைப் போன்ற நிலை, தம்பி ராஜேந்திரனுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக எவ்வளவோ பரிவோடு எடுத்துச் சொல்லியும் கூட, உடனடியாக இன்று உருவாகியுள்ள நவீன விஞ்ஞான மருத்துவ சிகிச்சை மூலம் அறுவை சிகிச்சை செய்து கொள்ளவேண்டுமென்று எடுத்துக் கூறியும்கூட, அவர் அதை மறந்து நாட்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்த காரணத்தால், அவரும் நம்மை விட்டுப் பிரிய நேரிட்டிருக்கிறது.

இவைகளையெல்லாம் சொல்வதற்குக் காரணம், சமுதாயத்திற்கு — நாட்டிற்கு — பொதுவாழ்விற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள், தங்களுக்காக அல்ல; மற்றவர்களுக்காகத் தங்களது உடல்நலத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்பதற்கு உரிய ஒரு பாடமாகக்கூட அந்த மூன்று சகோதரர்களுடைய வாழ்வு அமைந்திருக்கிறது, முடிவு அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக் கூற வேண்டியவனாக இருக்கின்றேன்.

நகராட்சி மன்றத் தலைவராகவும் அவர் பணியாற்றினார். ராமநாதபுரம் நகரத்தில் ஏற்பட்ட குடிதண்ணீர்ப் பற்றாக்குறையை உடனடியாக அகற்றுவதற்காக, அவர் போர்க்கால வேகத்திலே தொண்டாற்றியதை யாரும் மறந்திட இயலாது. அண்மையிலேதான் இராமேஸ்வரம் கோவில் அறங்காவல் குழுத் தலைவராக அவர் நியமிக்கப்பட்டவுடன் அந்தக் கோவிலுக்காக ரூ. 7,5 கோடி அளவுக்கு ஒரு திட்டத்தைத் தயாரித்து, அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்த கால கட்டத்திலே அவர் மறைந்திருக்கின்றார். இது போன்ற மறைவுகள் நமக்கு அதிர்ச்சியைத் தரக்கூடியவை என்பதிலே எள்ளளவும் சந்தேகமில்லை.

இன்று தம்பி ராஜேந்திரனுடைய குடும்பத்தாருக்கும், திரு. இளஞ்செழியன், திரு. கந்தசாமி கவுண்டர், திரு. போஜன் ஆகியவர்களுடைய குடும்பத்தாருக்கும், நாம் அனைவரும், கட்சிகளை எல்லாம் கடந்து மனிதாபிமான உணர்வோடு — தமிழர்கள் வேறு எதிலும் ஒன்று கூடினாலும் கூடுவார்கள். கூடாமலும் இருந்து விடுவார்கள் — சோகத்திலே ஒன்று கூடுவார்கள், அது ஒன்றுதான் தமிழர்களுடைய நாகரிகம், பண்பாடு என்பதற்கு எடுத்துக்காட்டாக, பல கட்சியினரும் இந்தச் சோகத்திலே இன்றைக்குக் கலந்துகொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, என்னுடைய இரங்கலை அனைவருடைய இரங்கல் உணர்வோடும் இணைத்து, இந்த அளவில் அமர்கின்றேன்.



1991 சனவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெருமக்களே, மறைந்த நமது உறுப்பினர் எம். எஸ். கே. ராஜேந்திரன் அவர்களுடைய மறைவு குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் எடுத்து மொழிந்த தீர்மானத்தையொட்டி, அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த பெருமக்களுடைய இரங்கல் உரையும், அதனோடு மாண்புமிகு முதல்வர் அவர்களின் இரங்கல் மொழியையும் இணைத்து, பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் அதனோடு இணைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு சட்டப்பேரவை உறுப்பினர் என்ற முறையில் மட்டும் அல்லாமல், என்னுடைய பக்கத்துத் தொகுதியைச் சேர்ந்தவர் என்ற உறவோடும் நான் சார்ந்திருக்கின்ற முகவை மாவட்டத்தின் ஓர் உறுப்பினர் என்ற முறையிலும், அரசினுடைய வளர்ச்சிப் பணிகளைக் கண்காணிக்கின்ற பகுதிகளிலும் அவர் தன்னுடைய தொகுதிக்கு ஆற்ற வேண்டிய பணிகளுக்கு வடிகால் அமைத்துக் கொடுக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர் என்ற முறையிலும், அவரோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டவன் என்ற முறையிலும், அவருடைய மறைவு என்பது மற்ற இழப்புகளோடு எண்ணப்படாமல், ஓர் ஈடு இணையற்ற, ஈடு செய்ய முடியாத இழப்பு என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

பொதுவாகவே, தம்பி ராஜேந்திரன் மிகச் சிறந்த பண்பாடு படைத்தவர். ஒரு சிலருக்கு இருப்பதைப்போல போர்க்குணம் என்பதை அவரிடத்திலே நாம் அறவே பார்க்க முடியாது. மிகுந்த பொறுமைக் குணம் படைத்தவர். நிலத்திற்கு என்று சொல்லப்பட்ட பண்பைப் போல, ஒரு நிலத்திற்கு, அகழ்வாரைத் தாங்கும் நிலம் எப்படித் தன்னை அகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளுகிறதோ, அதைப் போன்ற ஆழ்ந்த பொறுமை பண்பு உடையவர் தம்பி ராஜேந்திரன். அதுமட்டுமல்லாமல், அவர் தந்தை, அவருடைய சகோதரர் சத்தியேந்திரன், தம்பி ராஜேந்திரன் ஆகியோரெல்லாம் தொடர்ந்து இராமநாதபுரம் நகராட்சித் தலைவர் என்ற பொறுப்பை வகித்தவர்கள்.

9.40 மணி

சகோதரர் சத்தியேந்திரன் அவர்கள் வகித்த சட்டமன்றப் பொறுப்பைப் போலவே தம்பி ராஜேந்திரன் அவர்களும் அந்தப் பொறுப்பைத் தொடர்ந்து வகித்தவர். எத்தனை பொறுப்புகள், எத்தனை பதவிகள் ஏற்றாலும் அவற்றில் எந்தவிதமான ஆணவத்திற்கும் வாய்ப்பு அளிக்காமல் பொதுமக்களுக்குத் தொண்டாற்றுகிறோம் என்ற அடிப்படை உணர்வை மட்டும் நெஞ்சில் தேக்கிக்

D
V 21,31'N91 144894
N91:36·1

கொண்டு பணியாற்றக்கூடிய மிகச்சிறந்த பண்பைப் படைத்தவர் தம்பி ராஜேந்திரன் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப் பிடுவது பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைப் போலவே ஒரே குடும்பத்தில் தொடர்ந்து இப்படிப்பட்ட இழப்பு கள் வரும்போது எவரும் அவற்றை எளிதாகத் தாங்கிக் கொள்ள முடியாது. அதே நேரத்தில் அந்தக் குடும்பத்திற்கு ஏற்பட்டதைப் போல துன்பம் வேறு எந்தக் குடும்பத்திற்கும் ஏற்படக்கூடாது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த அளவிற்கு தொடர்ந்து திரு. மகேந்திரன், திரு. சத்தியேந்திரன், திரு. ராஜேந்திரன் ஆகியவர்களுடைய இழப்பு அந்தக் குடும்பத்தை எந்தஅளவிற்குப் பாதித்து நிலைகுலையச்செய்திருக்கும் என்பதை, " பட்ட காலிலேயே படும் " என்ற பழமொழி வாயிலாகக் கூட நாம் உணர முடியும். அப்படிப்பட்ட துயரம் எவருக்கும் வரக் கூடாது என்ற உணர்வோடு, மறைந்துவிட்ட தம்பி ராஜேந்திரன் அவர்களுடைய நினைவு என்றும் நினைக்கத்தக்க தாகவும் அவர் விட்டுச் சென்ற நல்ல பண்புகள்—" தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்று சொல்வதைப்போல, அவர் விட்டுச் சென்ற நல்ல பண்புகள்தான் அவர் விட்டுச் சென்ற எச்சம் என்ற உணர்வோடு. அந்தப் பண்பு களோடு நாம் வாழ்ந்து மிளிர்வதற்கு அவருடைய மறைவுக்கு அஞ்சலி செலுத்தி இந்த நேரத்தில் நம்முடைய இரங்கலை அவரை இழந்து தவிக்கிற அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம் என்ற அளவோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப் னர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நின்றதன் மூலம்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த உறுப்பினருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய அலுவல் கள் இத்துடன் ஒத்திவைக்கப்பெற்று, பேரவை மீண்டும் 21—1—1991 திங்கட்கிழமை 9.00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை 9.42 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.





## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. தொல்பொருள் இயல் வேதியிலர் பதவியை தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதி களுக்குள் உட்படுத்துதல் குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 21–3–1989-ஆம் நாளிட்ட 168–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5)-ன் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

2. 1983-ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 4–1–1990-ஆம் நாளிட்ட 19-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

3. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு வெல்லப்பாகு கட்டுப் பாடு மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 21–3–1990 ஆம் நாளிட்ட 361 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

4. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 21—11—1989 ஆம் நாளிட்ட 620 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) ன் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

5. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் விதி களில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 26–9–1989 ஆம் நாளிட்ட 2043 ஆம் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1988 ஆம்

ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

6. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நாட்டு மதுபான (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளை இயற்றுவது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 23-5-1990-ஆம் நாளிட்ட 609 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

7. சென்னை புற்று நோய் நிலையத்திற்குச் சொந்த மான (WiA) மோட்டார் வண்டிகளுக்கு வரிச் சலுகை கள் அளிப்பது குறித்து உள் (போ. அ.) துறையின் 20-4-1990 ஆம் நாளிட்ட 854-ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக் கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

8. காமராஜர் மாவட்டம் விருதுநகர் திரு. ஏ.பி.சி. மாணிக்க நாடார் அவர்களால் விற்பனை செய்யப்பட்ட துவரம் பருப்பு துகள்களுக்கு விதிக்கப்பட்ட வரியினை கைவிடுதல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 3—4—1990-ஆம் நாளிட்ட 204 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனைச் வரிச்சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம்1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

9. சிறு தொழில் நிறுவனங்களினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரித் தொகையினை தள்ளி வைப்பதற் கான அதிகாரப் பகிர்வு குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 1—6—1990 ஆம் நாளிட்ட 349-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

10. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்–1) துறையின் 21—8—1989-ஆம் நாளிட்ட 1746 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட





அறிவிக்கை. [தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

11. டி.டி.ஆர். 594-என் கொண்ட மோட்டார் வாகனத் திற்கு, வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல் குறித்து உள் (போ.அ.) துறையின் 8—2—1990 ஆம் நாளிட்ட 299-ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

12. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்பு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போ.) துறையின் 13—2—1990ஆம் நாளிட்ட 330ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

13. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 21—3—1990 ஆம் நாளிட்ட 138 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5)-ன் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

14. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10—4—1990 ஆம் நாளிட்ட 231 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

15. வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறை யினால் வெளியிடப்பட்ட அறிவிக்கை என். 11 (1)/ வ.வ.ச.அ./699 (அ)/89, நாள் : 31—10—1980-ல் திருத்த மொன்று செய்வது குறித்து அத்துறையின் 21—3—1990ஆம் நாளிட்ட 160 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

53-325—4

16. வெல்லத்திற்கு 8 சதவீத ஒரு முனை வரிவிதிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 3—4—1990 ஆம் நாளிட்ட 203 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

17. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வடிசாலை விதியில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 17-5-1990 ஆம் நாளிட்ட 580 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை[தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

18. தமிழ்நாடு 1954ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய உள்ளிட்டு எல்லையிலிருந்து குறிப்பிட்ட சில பதவி நியமனங்களை நீக்கம் செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 27-11-1989 ஆம் நாளிட்ட 625ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5)-ன் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

19. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனங்களுக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து ஒரு திருத்தம் செய்வது சம்பந்தமாக வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 30-1-1990 ஆம் நாளிட்ட 56ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

20. மின்னணுப் பொருட்களின் விற்பனையின் மீது விதிக்கக் கூடிய வரியினை குறைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 30-3-1990ஆம் நாளிட்ட 187ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

21. மாற்று பேருந்துகளுக்கு வரி நிர்ணயம் செய்வது குறித்து உள் (போ. அ.) துறையின் 16-2-1990 ஆம் நாளிட்ட 357 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].





22. தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 15-6-1990-ஆம் நாளிட்ட 707-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

23. ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த இயக்கூர்திகளால் செலுத்தப்பட வேண்டிய ஆண்டு வரியினை வசூலிக்கும் அதிகாரத்தினை வட்டார போக்குவரத்துத் துறை அலுவலர்களுக்கு அளிப்பது குறித்து உள் (போ.அ.) துறையின் 6-7-1990-ஆம் நாளிட்ட 1587-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

24. தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு மதுபான(சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 10-5-1990-ஆம் நாளிட்ட 563-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

25. நெல், பருத்தி, வேர்க்கடலை மற்றும் கரும்பு வெல்லம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் வட மதுரை விற்பனை அங்காடியினை அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 6-1-1990-ஆம் நாளிட்ட 18-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 39 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

26. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராயங்கள் (உற்பத்தி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 29-6-1990 ஆம் நாளிட்ட 763 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

27. வேலூர், தமிழ்நாடு வெடிமருந்து தொழிற்சாலைக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 24-4-1990 ஆம்

நாளிட்ட 249ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

28. டாக்டர் எம். அனந்தகிருஷ்ணன் அவர்களை அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தராக நியமனம் செய்தது குறித்து கல்வித் துறையின் 8-5-1990 ஆம் நாளிட்ட 633 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

29. தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு கால்நடை மருத்துவ அவைத் தேர்தல் விதிகளை வகுப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 6-1-1987ஆம் நாளிட்ட 21ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்கள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1957) 16 (7) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

30. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு கால் நடை மருத்துவ அவைத் தேர்தல் விதிகளில் சட்டம் நிறைவேற்றுவது குறித்து வேளாண்மைத் துறையின் 8-6-1987ஆம் நாளிட்ட 1093 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு கால் நடை மருத்துவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1957) 16 (7) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

31. கருப்பு கரும்பு கொள்முதல் மீது விதிக்கக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 17-3-1990ஆம் நாளிட்ட 155 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

32. தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் அட்டவணை 1, வகை [illegible] திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் [illegible]-1990 ஆம் நாளிட்ட [illegible] ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]





33. திருச்சிராப்பள்ளி, ஸ்ரீ இராமகிருஷ்ணா தபோவனத்தின் [illegible]க நடவடிக்கைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6-3-1990 ஆம் நாளிட்ட 129 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

34. சென்னை, திருவாளர்கள் மகாலஷ்மி ரோலர் மாவுமில் நிறுவனத்தாரால் வியட்நாமுக்கு ஏற்றுமதி செய்யப்படும் / மாவின் மீது விதிக்கக் கூடிய / கோதுமை வரியினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 3-4-1990 ஆம் நாளிட்ட 205 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

35. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல் நாட்டு சாராயங்கள் (உற்பத்தி) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 12-6-1990 ஆம் நாளிட்ட 690 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

36. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல் நாட்டு சாராயங்கள் விதிகளின் இயங்கு முறைகளி லிருந்து திருவாளர்கள் பாலாஜி வடிசாலை நிறுவனத்தாருக்கு விலக்களிப்பது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் 28-5-1990 ஆம் நாளிட்ட 630 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

37. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வடிப்பாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 12-6-1990 ஆம் நாளிட்ட 689 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

38. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நாட்டு மதுபான (உற்பத்தி) விதிகளை வகுப்பது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 23-5-1990 ஆம் நாளிட்ட 608 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

39. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குச் சொந்தமான பொது வளாகங்களை நிர்வகிக்கும் வகையில் அக்குழுமத்தின் எஸ்டேட் அதிகாரியை நியமனம் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 22-6-1990 ஆம் நாளிட்ட 1434 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (அனுமதியின்றி குடியிருப்போரை வெளியேற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

40. இறக்குமதி செய்யப்பட்ட அயல் நாட்டு இயக்கூர்திகளுக்கு விதிக்கக் கூடிய வரியினை குறைப்பது குறித்து உள், (போ-அ.) துறையின் 4-4-1990 ஆம் நாளிட்ட 739 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

41. சென்னையிலுள்ள ஜப்பான் தூதரக அதிகாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்காக செலுத்தக் கூடிய வரியிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 14-5-1990 ஆம் நாளிட்ட 281 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

42. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 29-5-1990 ஆம் நாளிட்ட 324 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

43. சென்னை, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வாங்கப்படும் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறை







யின் 30-5-1990 ஆம் நாளிட்ட 331 ஆம் என் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு
பொது விற்பனை வரிச் சட்டத்தின் ( தமிழ்நாடு சட்டம்
1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

44. சென்னை திருவாளர்கள் தக்ஷிணசித்ரா அவர்களால்
நடத்தப் பெற்ற பொருட்காட்சியில் பங்கு கொண்ட கேரள
மாநிலத்தின் ஆறு கூட்டுறவுச் சங்கங்களால் செலுத்தப்பட
வேண்டிய பதிவுக் கட்டணம் மற்றும் வரியினை தள்ளுபடி செய்
வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள்
துறையின் 18-7-1990 ஆம் நாளிட்ட 452 ஆம் என் அரசாணை
யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம்
ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

45. பொள்ளாச்சி தாலுக்கா, ஜமீன் ஊத்துக்குளி கிரா
மத்தில் உள்ள திருவாளர்கள் சென்னை உர நிறுவனத்தாரால்
செலுத்தப்பட வேண்டிய வரி நிலுவை மற்றும் தண்டத் தொகை
யினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும்
சமய அறக்கட்டளைகள் துறையின் 31-7-1990 ஆம் நாளிட்ட
480 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
[தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்
தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை
முன் வைக்கப்பெற்றது].

46. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளில்
திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறையின் 3-4-1990 ஆம் நாளிட்ட 411 ஆம்
என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு
1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்
டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது].

47. இந்திய உணவுக் கழகம் மற்றும் மத்திய கிடங்குப்
பண்டசாலைக் கழகம் ஆகியோரால் செலுத்தப்பட வேண்டிய
கூடுதல் விற்பனை வரியினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக
வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 12-9-1990
ஆம் நாளிட்ட 539 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை
வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

48. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி மற்றும்
ஊராட்சி ஒன்றிய குளங்களின் குத்தகை மற்றும் உரிமம் மூலம்
மீன் பிடிப்பு உரிமைகள் வழங்குதல் விதிகளில் திருத்தமொன்று
செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 3-5-1990 ஆம்

நாளிட்ட 367 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறி விக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

49. சென்னையிலுள்ள திருவாளர்கள் தென்னிந்திய மனித நேய சங்கத்தினரால் கொள்முதல் செய்யப்பட்ட பொருட் களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 23-7-1990 ஆம் நாளிட்ட 456 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

50. அரிஸ்தம் மற்றும் அலவாசம் ஆகியவற்றின் விற்பனை மீது வரி விதிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 21-6-1990 ஆம் நாளிட்ட 386 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

51. கோவை, ஊனமுற்ற குழந்தைகள் நிவாரண சங்கத் தினரால் வாங்கப்பட்ட இயந்திரங்கள், மருத்துவமனை சாதனங் கள் மற்றும் கருவிகள் ஆகியவற்றிற்கு விதிக்கக் கூடிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 7-5-1990 ஆம் நாளிட்ட 273 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

52. சவ்வரிசி மற்றும் மரவள்ளிக் கிழங்கு மாவுப் பசைக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 30—5—1990 ஆம் நாளிட்ட 332 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

53. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு மதுபான (இடம் பெயர்வு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 14—6—1990 ஆம் நாளிட்ட 699 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].





54. திருச்சிராப்பள்ளி, நடுபட்டி மணிகண்டன் ஊராட்சி கல்வி மற்றும் கிராம வளர்ச்சி சங்கம் விற்பனை செய்யும் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 30—8—1990 ஆம் நாளிட்ட 527 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

55. சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் உணவகங்களில் விற் பனை செய்யப்படும் உணவு மற்றும் பானங்கள் விற்பனைக்கான வரிவிலக்கு வரம்பினை மேலும் உயர்த்துதல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 5—9—1990 ஆம் நாளிட்ட 532 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

56. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 21—5—1990 ஆம் நாளிட்ட 589 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

57. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 25—9—1990 ஆம் நாளிட்ட 1003 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத் தின் (மத்தியச் சட்டம் 14/1947) 38 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

58. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மதுபான (சில்லரை விற் பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 12—9—1990 ஆம் நாளிட்ட 911 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

59. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை (இரயில் பயணச் சலுகை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொது (திருவாகம் மற்றும் சட்டமன்றம்) துறையின் 19—9—1990 ஆம் நாளிட்ட 1485 ஆம் எண் அரசாணையில்

[1991 சனவரி 19

வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு
சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951)
14 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

60. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி விதி
களில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும்
சமய அறக்கட்டளைகள் துறையின் 4—4—1990 ஆம் நாளிட்ட
215 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
[தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின்கீழ் பேரவை முன்
வைக்கப்பெற்றது].

61. சாக்கோட்டை, தூய இருதய தொழுநோய் மையத்
திற்கு சொந்தமான எம்டிஓ 8041 என் கொண்ட வூண்டிக்கு
சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போ. அ.)
துறையின் 10—8—1990 ஆம் நாளிட்ட 1846 ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு
1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன்
வைக்கப்பெற்றது].

62. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மதுபான (சில்லரை விற்
பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மது
விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 11—5—1990 ஆம்
நாளிட்ட 554 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது].

63. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வடிப்பாலை விதிகளில்
திருத்தமொன்று செய்வது குறித்து, உள், மதுவிலக்கு மற்றும்
ஆயத் தீர்வைத் துறையின் 14—8—1990 ஆம் நாளிட்ட
887 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
[தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்
நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன்
வைக்கப்பெற்றது].

64. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் 1987-88
ஆம் ஆண்டிற்கான மூன்றாம் ஆண்டு அறிக்கை. [1956 ஆம்
ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)
619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ்,
ஆங்கிலம்].

65. 1988-89 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்
பாடு வாரியத்தின் ஆண்டுக் கணக்குகள். [1974 ஆம் [illegible]
நீர் (மாசுத் தடுப்பு கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் [illegible]
6/1974) 39 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).
தமிழ், ஆங்கிலம்].



1991 சனவரி 19]

66. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1983-84 ஆம்
ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்
நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
4/1971) 47 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).
தமிழ், ஆங்கிலம்].

67. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1984-85 ஆம்
ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்
நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
4/1971) 47 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).
[தமிழ், ஆங்கிலம்).

68. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1985-86 ஆம்
ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்
நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
4/1971) 47 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).
(தமிழ், ஆங்கிலம்].

69. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1986-87 ஆம்
ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்
நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
4/1971) 47 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).
தமிழ், ஆங்கிலம்].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் முதலிய தாள்கள்.

1. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள்
சார்ந்த (மூன்றாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு
அவசரச் சட்டம் எண். 4/1990).

2. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பணிக் கூட்டுறவுச்
சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த அவசரச் சட்டம்
[தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 5/1990).

3. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 9-1-1981
ஆம் நாளிட்ட 218 ஆம் எண் அரசாணைக்கான பிழை திருத்தம்.

4. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகை
[illegible]) நீக்க அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம்
[illegible]/1990).

[illegible] 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்
[illegible] (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம்
எண். 7/1990).

6. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 8/1990).

7. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 9/1990).

8. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ் நாடு அவசரச் சட்டம் எண். 11/1990).

9. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) திருத்த அவசரச் சட்டம் (தமிழ் நாடு அவசரச் சட்டம் எண். 10/1990).

10. 1990 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 12/1990).

11. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவு வழங்கு நிறுவனங் கள் சட்டம் தொடர்பாக 5—12—1978 ஆம் நாளில் நடை பெற்ற தொழிலாளர் நலச் சட்டங்கள் குறித்த குழுவின் 6 ஆம் கூட்ட அறிக்கையும் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கையும். (தமிழ், ஆங்கிலம்).

12. 1991 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 18 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

144894

K21,31'N91
N91:36.1